**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Saravanakumar |
| P.W. | : 4 |
| Father Name | : Selvam |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 29/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.12.2021

நான் கொழுமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை தெரியும். சம்பவத்தன்று பார்த்துள்ளேன். அதற்கு முன்பு எதிரியை நான் பார்த்ததில்லை . கடந்த 25.10.2010 காலை பள்ளிக்கு செல்ல வேண்டி காலை 9 மணிக்கு கொழுமம் டெம்போ ஸ்டாண்ட் அருகில் உள்ள பஸ் ஸ்டாப்பில் நான் பள்ளிக்கூடம் செல்வதற்காக நின்று கொண்டு இருந்தேன் . அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒரு டிராக்டர் வந்தது. அது நீல நிறத்தில் இருந்தது . பெயர் தெரியாது . TN 41 C 5166 என்ற எண் கொண்ட டிராக்டர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் போது டிராக்டரின் பின்பக்க வலது பக்கம் டியர் மூட்டையில் ஏறி வெடித்துவிட்டது . அந்த இடத்தில் மூட்டை எப்படி வந்தது என்று எனக்கு தெரியவில்லை . எனக்கு முதுகில் , நெற்றியில் மருந்து

தெறித்ததனால் காயம் ஏற்பட்டது. அந்த டிராக்டரை ஓட்டி வந்தவர் யார் என்று எனக்கு தெரியாது. அதை ஓட்டி வந்தவர் நீதிமன்றத்தில் இல்லை . ஆஜர் எதிரியை டிராக்டரில் பார்த்தேன். அதை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியவில்லை . நாங்கள் பள்ளிக் குழந்தைகள் 4 பேர் இருந்தோம் என்னுடன் ஆனந்த்ராஜ் , மாரிமுத்து, சுரேஷ் ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் காயம் ஏற்பட்டது . அந்த மூட்டை அந்த இடத்திற்கு எப்படி வந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது .எனக்கு காயம் ஏற்பட்டால் நான் உடுமலை அரச மருத்துவமனைக்கு சென்றேன் . போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Kanimozhi |
| P.W. | : 5 |
| Father Name | : Govindaraj |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 18/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of .
27.12.2021

நான் கொழுமத்தில் குடியிருந்து கல்லூரியில் நர்சிங் படித்து வருகிறேன் . கடந்த 2010 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. நான் அப்போது 1 ம் வகுப்பு கொழுமம் அரசு பள்ளியில் படித்தபோது எனக்கு நேரம் ஞாபகம் இல்லை . நான் சின்னபிள்ளை எனக்கு எதுவும் தெரியவில்லை. எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பில் கு.வி

கடந்த 25.10.2010 ம் தேதி காலை 09 மணிக்கு நானும் , எனக்கு அக்கா

பொன்மணியும் கொழுமம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டிராக்டர் ஒரு மூட்டையின் மீது ஏறி வெடித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வெடித்ததனால் எனக்கு வலது கண்ணின் பக்கத்தில் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த டிராக்டரில் ஆஜர் எதிரி வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Ponmani |
| P.W. | : 6 |
| Father Name | : Govindaraj |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 20/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 27.12.2021

நான் கொழுமத்தில் குடியிருந்து பி.காம். படித்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. கொழும் பேருந்து நிறுத்தத்தில் நான் மூன்றாம் வகுப்பு படித்தேன். நான், எனது பாப்பா கனிமொழி அ.சா.4 மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் கொழுமத்தில் பஸ் ஸ்டாண்டில் நின்று மருத்துவமனை செல்ல வேண்டி நின்று கொண்டிருந்த போது வெடி வெடித்தது. என்ன வெடி , எதனால் என்று தெரியவில்லை. யார் வெடித்தார்கள் என்று தெரியவில்லை. எனக்கு கை , கால்களில் காயம் ஏற்பபட்டது. உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பில் கு.வி

கடந்த 25.10.2010 ம் தேதி காலை 09 மணிக்கு நானும், எனக்கு தங்கை கணிமொழியும் கொழுமம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டிராக்டர் ஒரு மூட்டையின் மீது ஏறி வெடித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . வெடித்ததனால் எனக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த டிராக்டரில் ஆஜர் எதிரி வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Irulappan |
| P.W. | : 7 |
| Father Name | : Periyasamy |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 41/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 27.12.2021

நான் கொழுமத்தில் குடியிருந்து டிரைவர் வேலை செய்கிறேன் . கடந்த 25.10.2010 ம் தேதி காலை சுமார் 9 மணி அளவில் கொழுமம் பஸ் ஸ்டாண்டில் நான் வேலைக்கு செல்ல வேண்டி பஸ்சுக்கு நின்று கொண்டு இருந்தேன் . டம் என்று சத்தம் கேட்டது . எனது குழந்தை மனோஜ்குமாருக்கு கையில் அடிப்பட்டது நான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் பின்னர் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் பக்கத்தில் பேக்கரியில் நின்று கொண்டு இருந்தேன் . சத்தம் எப்படி வந்தது எதனால் வந்தது என்று எனக்கு தெரியாது.

சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பில் குவி

கடந்த 25.10.2010 ம் தேதி காலை 09 மணிக்கு நானும், நான் வேலைக்கு செல்ல வேண்டி கொழுமம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டிராக்டர் ஒரு மூட்டையின் மீது ஏறி வெடித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வெடித்ததனால் எனது மகனுக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த டிராக்டரில் ஆஜர் எதிரி வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 293/2019 |
| Name | : Nagamanikkam |
| P.W. | : 8 |
| Father Name | : Irulappan |
| Village | : Kozhumam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 36/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 27.12.2021

நான் கொழுமத்தில் குடியிருந்து வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருக்கிறேன் . அ.சா. 7 எனது கணவர் ஆவார் . கடந்த 25.10.2010 ம் தேதி அன்று மடத்துக்குளம் செல்வதற்காக காலை 9 மணிக்கு கொழுமம் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன் . அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி டிராக்டர் வந்தது சத்தம் கேட்டது . புகை மண்டலமாக மாறிவிட்டது. என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை . டிராக்டரை யார் ஓட்டி வந்தார்கள் யார் உட்கார்ந்து வந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு முகத்தில், வலது கையில் காயம் ஏற்பட்டது . எனது மகன் மனோஜ்குமாருக்கு காயம் ஏற்பட்டது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கோவை அரசு

மருத்துவமனைக்கு கண்ணில் ஆப்ரேசன் செய்தோம் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பில் கு.வி

அந்த டிராக்டர் ஒரு சாக்குப்பையின் மீது ஏறியதால் புகை மண்டலமாக கற்கள் எங்கள் மீது அடித்தது வேறு எதுவும் தெரியாது .அந்த டிராக்டரில் ஆஜர் எதிரி வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.